

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 7.50 இலட்சத்திற்கான காசோலைகளை பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (01.09.2016) வழங்கினார். தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 592/2016 நாள்: 01.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 7.50 இலட்சத்திற்கான காசோலைகளை பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு இன்று (01.09.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில், வடசேரி, வடக்கு கிராமத்தை சார்ந்த திரு.சுபாஷ் என்பவர், மின்சாரம் தாக்கி 30.08.2015 அன்று மரணமடைந்ததற்காக அன்னாரது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3,00,000/-க்கான காசோலையினையும், திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகே 30.10.2015 அன்று நடந்த சாலை விபத்தில் தெரசம்மா என்பவர் மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/-க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 30.10.2015 அன்று நடந்த சாலை விபத்தில் மரணமடைந்த திருமதி. ரேவதி ராணி என்பவரின் வாரிசுதாரரான திரு.ஆரோக்ய டொமினிக் ராஜ் என்பவரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/-க்கான காசோலையினையும், பூமாடத்தி லீமா ரோஸ் என்பவர் சாலை விபத்தில் மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரர் திரு.லிவின் ஆன்சி என்பவரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/-க்கான காசோலையினையும், தோவாளை வட்டம் திருப்பதிசாரம் கிராமத்தை சார்ந்த திரு.சோமு என்பவரின் மனைவி வேலம்மாள் 03.11.2015 அன்று நடந்த சாலை விபத்தில் மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00.000/- காசோலையினையும், கல்குளம் வட்டம், ஏற்றக்கோடு கிராமத்தை சேர்ந்த திரு.குமாரதாஸ் என்பவர் மின்சாரம் தாக்கி 22.07.2015 அன்று மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/- க்கான காசோலையினை என மொத்தம் பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 7.50 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (01.09.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன் உடனுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.